**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : DW-2
Date : 25.02.2026
Case No. : **O.S.166/2019**
Nationality : Indian
Name : ஸ்டெல்லாமேரி
Religion :
Father's/Husband's Name : ஆரோக்கியசாமி
Age : 58
Village : அம்மன்பேட்டை
Taluk : திருவிடைமருதூர்

<u>பி.சா.2</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது ஆதார் அட்டை நகல் மற்றும் வீட்டிற்கான பட்டா இணையதள நகல் தாக்கல் செய்கிறேன். வழக்கை தள்ளுபடி செய்ய பிராத்திக்கிறேன்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**.

நீதிமன்ற அழைப்பாணையின் பேரில்தான் நான் சாட்சியம் சொல்ல வந்தேனா என்றால் என்னை பிரதிவாதி தரப்பில் நேரடியாக அழைத்து வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் புல எண் 130/15 சர்வே எண்ணில் நாங்கள் குடியிருந்து வருகிறோம். மற்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் ஆகி 31 ஆண்டுகள் ஆகிறது. அழகர், தர்மலிங்கம் இருக்கின்ற இடத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி நபர்கள் குடியிருந்து வரும் இடம் எப்படி கிடைத்தது என்று எனக்கு

தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு பற்றி விவரம் தெரியாது என்றாலும் பிரதிவாதி தரப்பில் என்னை அழைத்து வந்ததின்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).